செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
40, சாலைப் போக்குவரத்து நிறுவன வளாகம், நூறடிச் சாலை, தரமணி, சென்னை – 600113
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under Ministry of Education, Government of India)
40, IRT Campus, 100 Feet Road, Taramani, Chennai - 600113

# மொழியியல் புலம்

நடத்தும்

# வரலாற்றுமுறைத் தமிழ் இலக்கண ஆய்வு

## பயிலரங்கம் - 11

**(11.11.2021 – 17.11.2021)**

## அறிவிப்பும் அழைப்பும்

செம்மொழித் தமிழின் தொன்மையையும் பழம்பெருமையையும் நிலைநிறுத்துவதற்கு வரலாற்று முறையில் தமிழ் இலக்கணத்தை ஆய்வு செய்தல் இன்றியமையாததாகும். இவற்றை அடிப்படையாகக் கொண்டு **வரலாற்றுமுறைத் தமிழ் இலக்கணம்** எனும் பெருந்திட்டம் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் வகுத்துச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

வரலாற்று முறையில் தமிழ் இலக்கணம் எழுதப்பட்டுத் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் நூலாக வெளியிடுவது இத்திட்டத்தின் நோக்கமாகும். வரலாற்று முறையில் இலக்கணம் தொடர்பாகக் கிடைக்கப்பெறும் செய்திகள் தொகுக்கப்பெறும் பொழுது இலக்கியங்கள், உரைநடைகள், கல்வெட்டுகள் ஆகியவற்றின் மொழிநடைகளும் கருத்தில் கொள்ளப்பெறும். இவ்வாய்வு பழந்தமிழ் இலக்கியக் காலம், இடைக்காலம், தற்காலம் ஆகிய மூன்று காலப் பகுப்புகளைக் கொண்டிருக்கும்.

இந்த வரலாற்றுமுறைத் தமிழ் இலக்கணத் திட்டத்தை மேலும் வளப்படுத்தும் நோக்கில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் மொழியியல் புலம் சார்பாக **‘வரலாற்றுமுறைத் தமிழ் இலக்கண ஆய்வு’** எனும் பொருண்மையில் பயிலரங்கம் ஒன்றினை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

வரலாற்றுமுறைத் தமிழ் இலக்கணத் திட்டத்தின் முதல் நிலையாகக் கொள்ளப்பெறும் பழந்தமிழ் இலக்கியக் காலத்தை ஆய்வுக் களமாகக் கொண்டு இப்பயிலரங்கப் பொருண்மைகள் அமைக்கப்பெறும். அந்த வகையில் தொல்காப்பிய எழுத்து, சொல் அதிகாரங்களுள் கூறப்பட்டுள்ள இலக்கணக் கூறுகளான பெயர், வினைச் சொற்கள், வேற்றுமைகள், கால இடைநிலைகள், சாரியைகள், பன்மை விகுதிகள் போன்றனவற்றைப் பழந்தமிழ் நூல்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்களுள் பயின்று வந்துள்ளமையை ஆராயும் முயற்சி இப்பயிலரங்கில் மேற்கொள்ளப்பெறும்.

தமிழ் மொழியின் இலக்கணக் கூறுகளை ஒப்புநோக்கு நிலையில் நடத்தப்பெறும் இப்பயிலரங்கில் ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்ட ஆய்வு மாணவர்கள் பங்குபெற்றுப் பயன்பெறுமாறு அழைக்கிறோம்.

ஆய்வு மாணவர்களுக்காக நடத்தப்பெறும் இப்பயிலரங்கில் இலக்கணம், மொழியியல் துறை சார்ந்த அறிஞர்கள் பயிற்சி அளிக்க உள்ளனர்.

இப்பயிலரங்கமானது 11.11.2021 முதல் 17.11.2021ஆம் நாள் முடிய ஏழு நாட்கள் நடைபெறவுள்ளது. பயிலரங்க விதிமுறைகளும் விவரங்களும் கீழ்வருமாறு:

1. பயிலரங்கில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை 20.
2. பயிலரங்கு நடைபெறும் நாட்கள்: 11.11.2021 முதல் 17.11.2021 முடிய 7 நாட்கள்.
3. பயிலரங்கு நேரம்: காலை: 10.00 - 01.00 & மாலை: 02.00 - 05.00.
4. பங்கேற்பாளர்கள் தங்குமிடத்தைத் தாங்களே ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.
5. பங்கேற்பாளர்களுக்குப் பயணப்படி, நாட்படி மத்திய அரசு விதிமுறைகளின்படி வழங்கப்படும்.
6. பங்கேற்பாளர்களுக்கு மதிய உணவும், தேநீரும் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.
7. பயிலரங்கில் கலந்துகொள்ள விரும்புவோர் இதன் கீழுள்ள விண்ணப்பத்தை நிறைவுசெய்து workshopl@cict.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். இப்பயிலரங்கைப் பற்றிய கூடுதல் விவரங்களைத் தெரிந்துகொள்ள மேற்கண்ட மின்னஞ்சல் மூலமாகவே தொடர்புகொள்ள வேண்டும்.

எக்காரணத்தைக் கொண்டும் தொலைபேசி/அலைபேசி வழியாகத் தொடர்புகொள்ளக்கூடாது.

8. பயிலரங்கக் கட்டணம் ஏதும் இல்லை.
9. செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மின்னஞ்சல்/புலனம் வழியாக மட்டும் அழைப்பாணை அனுப்பி வைக்கப்படும்.
10. பங்கேற்பாளர்கள் செம்மொழி நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.
11. நிறைவு செய்யப்பெற்ற விண்ணப்பங்கள் வந்துசேர வேண்டிய இறுதி நாள் 31.10.2021. காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்கப்படமாட்டாது.
12. இப்பயிலரங்கில் பங்கேற்கத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு 01.11.2021 அன்று மின்னஞ்சல்/புலனம் மூலமாகத் தகவல் தெரிவிக்கப்படும்.

# செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை

## வரலாற்றுமுறைத் தமிழ் இலக்கண ஆய்வு

**<u>பயிலரங்கம்</u>**

**(11.11.2021 – 17.11.2021)**

**விண்ணப்பப் படிவம்**

நிழற்படம்

| | | | |
|---|---|---|---|
| 1. | பெயர் | தமிழ் | |
| | | ஆங்கிலம் | |
| 2. | பிறந்த நாள்/ வயது | | |
| 3. | பாலினம் | | |
| 4. | வகுப்பு (✓ செய்க) | | பொது [ ] இ.பி.வ. [ ] பட்டியல் இனத்தவர் [ ] |
| 5. | கல்வித் தகுதிகள் | | |
| 6. | முனைவர் பட்டப் படிப்பில் சேர்ந்த நாள்/ஆண்டு | | |
| 7. | முனைவர் பட்ட ஆய்வுத் தலைப்பு | | |
| 8. | பல்கலைக்கழகம்/கல்லூரி/நிறுவன முகவரி (தொலைபேசி/ மின்னஞ்சல் முகவரியுடன்) | | |
| 9. | இல்ல முகவரி (தொலைபேசி/ மின்னஞ்சல் முகவரியுடன்) | | |
| 10. | புலன எண் | | |

நாள் :

**(கையொப்பம்)**

இடம்:

**நெறியாளர் /துறைத்தலைவர்/முதல்வர்/பதிவாளர்**

**உரிய முத்திரையுடன் கையொப்பம்**